**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, பொள்ளாச்சி.**

**முன்னிலை திருமதி. B. சல்மா B.A., B.L., (Hons.)**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் .2., பொள்ளாச்சி**

**2026 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 13 ஆம் நாள் வியாழக்கிழமை**

**குற்றவியல் பல்வகை மனு எண். 675/2026**

தமிழ்நாடு அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,

பொள்ளாச்சி மேற்கு காவல்நிலையம்,

குற்ற எண் 594/2021 ............ மனுதாரர்/ புகார்தாரர்

**//எதிராக//**

மல்லீஸ்வரன் (34/2026),

த/பெ. கிருஷ்ணராஜ் .............எதிர்மனுதாரர்/எதிரி

**உத்தரவு**

1) மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் எதிரிக்கு வழங்கப்பட்ட பிணை உத்தரவை ரத்து செய்யக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது .

**2) மனுவின் சுருக்கம்** எதிர்மனுதாரர் மீது பொள்ளாச்சி மேற்கு காவல்நிலைய குற்ற எண் 594/2021, சட்டப்பிரிவுகள் 294(பி), 447, 392, 506(2) of IPC ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் பட்டிகை வழக்கு எண் 432/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு மேற்படி வழக்கில், குற்றப்பல்வகை மனு எண் 7250/2021 ன் கீழ், 15.12.2021 ம் தேதியிட்ட உத்தரவின் பேரில் பிணை பெற்று வெளியே சென்றுள்ளதாகவும், எதிரி நீதிமன்ற உத்தரவை மீறி வேண்டுமென்றே சட்டத்தை மதிக்காமல் நியாயத்திற்கு புறம்பாக இருந்து வந்துள்ளதாகவும், மேலும் எதிரிக்கு எந்த குற்றங்களில் ஈடுபடக்கூடாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தும், அதனை மீறி குற்றத்தில் ஈடுபட்டுள்ளதால் கடந்த 19.02.2026 ம் தேதி எதிரி மீது பொள்ளாச்சி மேற்கு காவல்நிலைய குற்ற எண் 56/2026, சட்டப்பிரிவுகள் 296(b), 115(2), 351(3) of BNS and Sec. 4 of TNPHW Act and Sec. 3(1), 4 of TNPPDL Act ன் கீழ் வழக்கு பதிவு

செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரிக்கு வழங்கப்பட்ட குற்றப்பல்வகை மனு எண் 7250/2021 ன் கீழ் 15.12.2021 ம் தேதி வழங்கப்பட்ட நிபந்தனையை ரத்து செய்யக் கோரி மனுதாரர் தனது மனுவில் கூறியுள்ளார்.

3) எதிர்மனுதாரர்/எதிரிக்கு 27.07.2026 ம் தேதி இந்நீதிமன்றத்தில் இருந்து முறையாக அறிவிப்பு (Notice) அனுப்பப்பட்டுள்ளது.

4) எதிருரையின் சுருக்கம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறிய சங்கதிகள் அனைத்தும் பொய் என்றும், எதிரிக்கு எதிராக பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண் 56/2026 என்ற வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், மனுதாரர் தனது மனுவில் எதிரி, நீதிமன்ற உத்தரவை மீறி வேண்டுமென்றே சட்டத்தை மதிக்காமல் நியாயத்திற்கு புறம்பாக நடந்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் எந்த உத்தரவை மீறினார் என்றோ, எந்த சட்டத்தை மதிக்காமல் நியாயத்திற்கு புறம்பாக இருந்தார் என்று குறிப்பிட்டு கூறாமல், பொத்தாம் பொதுவாக மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது பொருந்தாத ஒன்று என்றும், எதிரி மீது கடந்த 2021 ம் வருடம் குற்ற எண் 594/2021 வழக்கு பதிவு செய்து 5 வருடம் ஆகிறது. இந்த 5 வருடத்தில் மேற்படி வழக்கின் வாதியையோ, சாட்சிகளையோ எதிரி அச்சுறுத்தவோ, தலைமறைவாகவோ ஆகாத நிலையில் மனுதாரர் எவ்வித ஆதாரமும், முகாந்திரமும் இல்லாத நிலையில் மனுதாரர், எதிரி மீதான பிணை உத்தரவை ரத்து செய்யுமாறு மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றும், மேலும் எதிரி மீது பதிவு செய்யப்பட்ட குற்ற எண் 594/2021 வழக்கானது முற்றிலும் ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றும் எதிர்மனுதாரர் தனது எதிருரையில் தெரிவித்துள்ளார்.

5) வழக்குக் கோப்புகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், இம்மனுவானது கடந்த 27.07.2026 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, கடந்த 04.08.2026 ம் தேதி எதிரி இந்நீதிமன்றத்தில் அவரது வழக்கறிஞருடன் ஆஜராகி பின்னர் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை ஏதும் இருப்பின் அதனை தாக்கல் செய்யக் கோரி வாய்தா போடப்பட்டிருந்தது. இந்நிலையில் எதிர்மனுதாரர் 05.08.2026 ம் தேதி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

6) மேற்படி வழக்கு கோப்புகள், மனு மற்றும் எதிருரையில் உள்ள சங்கதிகளை ஆராய்ந்து பார்க்கும்போதும், மேலும் மனுதாரர் தரப்பில் எதிரி மீது பதிவு செய்யப்பட்டுள்ள குற்ற எண் 56/2026 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகல் ஆகியவற்றை ஆராய்ந்து பார்க்கும்போது எதிரி அவருக்கு வழங்கப்பட்ட பிணை உத்தரவினை மீறி, எதிரி மீண்டும் அதுபோன்ற குற்ற செயல்களில் ஈடுபட்டுள்ளதால் அவர் மீது மீண்டும் பொள்ளாச்சி மேற்கு காவல்நிலையத்தில் குற்ற எண் 56/2026 ன் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கின் புலன்விசாரணை நிலுவையில் இருந்து வருவது தெளிவாக தெரிகிறது. எனவே எதிர்மனுதாரர் அவருக்கு விதிக்கப்பட்ட பிணை நிபந்தனைகளை மீறியுள்ளதால், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறிய சங்கதிகள் நியாயமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

5) இறுதியாக இம்மனு பின்வரும் நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது.

i) எதிர்மனுதாரர் /எதிரிக்கு ஏற்கனவே இந்நீதிமன்றத்தால் குற்றப்பல்வகை மனு எண் 7250/2021 ன் கீழ் 15.12.2021 ம் தேதியிட்ட உத்தரவின் கீழ் வழங்கப்பட்ட பிணை உத்தரவை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இன்று 2026 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 13 ஆம் நாள் இந்த உத்தரவு என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒ/ம். Tmt. B. சல்மா B.A., B.L., (Hons.),

**நீதித்துறை நடுவர் எண்-2,**

**பொள்ளாச்சி.**

**//உண்மை நகல்//**

**நீதித்துறை நடுவர் எண்-2,**

**பொள்ளாச்சி.**